சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **396 / 2015**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **18.07.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : ராமசாமி | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் குளித்தலை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக பூபதி என்பவர் 11.09.2014ம் தேதி குளித்தலை காவல் நிலையத்தில் அப்போது குளித்தலை காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக இருந்த மணி என்பவரிடம் புகார் கொடுக்கப்பட்டு மேற்படி புகாரின் அடிப்படையில் குளித்தலை காவல் நிலைய குற்ற எண். 379/2014ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கினை விசாரணை செய்து ஆய்வாளர் மணி என்பவர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதில் பேருந்தின் பதிவு எண் தவறாக உள்ளதாகவும், TN 45 AS 7267 க்கு பதிலாக TN 45 AS 7269 என்றும், விபத்து மேற்படி பேருந்து மோதியதால் ஏற்படவில்லை என்றும் மேற்படி TN 45 AS 7267 என்ற பேருந்து அருகே வந்தபோது சைக்கிளில் சென்ற முத்து நிலை தடுமாறி வேகத்தடையில் ஏறி இறக்கி கீழே விழுந்து விட்டார் என்றும், அதனால் இவ்வழக்கு பொருண்மை தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி குற்ற இறுதி அறிக்கையின் உண்மை நகல் எ.ம.சா.ஆ.1.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கிடையாது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான மணி தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். மேற்படி மணியை விசாரித்தால் தான் இவ்வழக்கு விபத்து பற்றிய உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.